# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள கிரந்த வரிவடிவத்திலுள்ள வடமொழி நூல்களை (குறிப்பாக இந்துசமய நூல்களை) ஆவணப்படுத்தல்

லதா உமாசங்கர்

கிரந்த வரிவடிவம் அல்லது கிரந்த லிபி தமிழகத்தில் கி.பி 7ம் நூற்றாண்டளவில் பல்லவர் ஆட்சியோடு தோற்றம் பெற்றது. இதற்கு முக்கிய காரணம் பக்தி இயக்கத்தைத் தொடர்ந்து தமிழக ஆலயங்கள் ஆலயமரபில் அமைக்கப்பட்டதோடு பிராமணர்கள் கிரியை செய்யும் முறையும் ஆரம்பித்தமையேயாகும். அத்துடன் வடமொழியும் வடமொழி இலக்கியச் செல்வாக்கும் தமிழத்தில் இருந்த மொழியோடும் இலக்கியத்தோடும் கலந்து கொண்டன வடமொழியை எழுதுவதற்கு தமிழில் எழுத்துக்கள் இல்லாத காரணத்தால் கிரந்தம் என்ற புதிய வரிவடிவம் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் வடமொழிச் சொற்கள் இலக்கியங்களில் மட்டுமன்றி கல்வெட்டுக்களிலும் பயன்படுத்தப்பட்டது. கிரந்த எழுத்துக்களில் பெரும்பாலானவை தமிழ் எழுத்துக்களோடு ஒற்றுமை கொண்டிருந்தாலும் அவற்றில் சிறிய வேறுபாடு காணப்பட்டமையால் கிரந்த வரிவடிவத்தின் பயன்பாடு குறுகிய காலத்தில் செல்வாக்குப் பெற்றது. இதனால் காலப் போக்கில் இந்துமதம் சார்ந்த வடமொழி நூல்களை தமிழில் எழுதுவதற்கு கிரந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டமையே இவை தனி நூல்களாக வெளிவருவதற்குக் காரணமாகும். கிரந்த வரிவடிவமானது பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்றதால் இது பல்லவர் கிரந்தம் எனவும் அறிய முடிகின்றது. இன்றுவரை இவ்வெழுத்துமுறை வழக்கிலுள்ள போதும் அம்முறை அருகிவருவதைக் காணலாம் ஏனெனில் சமஸ்கிருதம் தேவநாகரி என்னும் வரிவடிவத்தை சிறப்பாகக் கொண்டுள்ளதும் சைவசமயக் குருமார்கள் கூடுதலாக அதைப்பயன்படுத்தும் காரணமாகலாம்.

கிரந்த வரிவடிவிலமைந்த சமஸ்கிருத நூல்கள் பலவற்றையும் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வாழ்ந்த அறிஞர்கள் பலரும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் தமிழ் சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியம் மிக்கவர்களாக இருந்தார்கள். அவர்களுள் இலங்கையர்களான சுவாமி ஞானப்பிரகாசர்,, சங்கர பண்டிதர், காசிவாசி செந்திநாதையர் வட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். அவர்கள் சமஸ்கிருத நூல்களை கிரந்த லிபியில் எழுதினார்கள். அது மட்டுமன்றி கிரந்த வரிவடிவத்திலுள்ள நூல்களை தமிழிலும், தமிழ் நூல்களை கிரந்த வரிவடிவத்திலும் எழுதினார்கள். மேலும் கிரந்த வரிவடிவத்தில் உள்ள நூல்களுக்கு விளக்கவுரைகளையும், குறிப்புரைகளையும் தமிழில் கொடுத்துள்ளதை இந்நூல்களில் அவதானிக்கலாம். பெரும்பாலும் இந்நூல்கள் இந்துதத்துவம் இந்துசமயம் சார்ந்த நூல்களாக உள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது.

யாழ் பல்கலைக்கழக நூலகத்தில் கிரந்த லிபி பயன்படுத்தப்பட்ட ஏறத்தாள நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன. அவற்றில் சைவசித்தாந்தம், இந்துசமயக் கிரியைகள் சார்ந்த நூல்கள் அதிகம் உள்ளன இந்நூல்களில் பல தனியே கிரந்த லிபியில் எழுதப்பட்டுள்ளன. ஏனையவை தமிழும் கிரந்த லிபியும் கலந்து ஆக்கப்பட்டனவாகவும் உள்ளன. இவற்றைவிட சில நூல்கள் முழுவதும்

கிரந்த லிபியில் அமைந்துள்ள போதும் அவற்றின் தலைப்பு முன்னுரை போன்றவை தமிழிலும் எழுதப்பட்டுள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது.

யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள நூல்களின் விபரங்கள் அனைத்தும் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் கிரந்த லிபியில் உள்ள நூல்கள் கணனியில் பதிவேற்றம் செய்யப்படவில்லை அந்நூல்களை வாசித்து அதிலுள்ள நூல்விபரங்களைப் பெறுவதில் தேர்ச்சியுள்ளவர்கள் இல்லாமையே எதிர்நோக்கிய முக்கிய பிரச்சனையாகும். இதனால் இந் நூல்கள் பற்றிய தகவல்கள் எவருக்குமே தெரியவராமல் பயன்படுத்தப்படாமலேயே கால ஓட்டத்தில் மறைந்து போய்விடும் என்ற அச்சமே மேலோங்கி இருக்கின்றது. இந்நூல்கள் மிகவும் பழமையானவையாகவும். தகுந்த பராமரிப்பு இல்லையேல் அழிந்துவிடக் கூடியவையாகவும் உள்ளன. இந்நூல்கள் பெரும்பாலும் இந்துசமயம் சார்பாக உள்ளன. இதன் மூலம் தமிழர் பண்பாடு. கலாச்சாரம், இந்துசமயம் மற்றும் வரலாறு சார்ந்து பல அறியப்படாமல் இருக்கும் விடயங்களை அறிய முடியும். இது எமது தமிழர் வரலாற்றுக்கு அதன் சிறப்பிற்கு மேலும் உரமூட்டும் என்பது திண்ணம். அத்துடன் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகக் கொண்டிருக்கும் இப்பல்கலைக்கழகத்திற்கு இது அவசியமானதொன்றாகும். மேலும் இப்பல்கலைக்கழகம் தொடங்கியபோது தமிழிற்கும் இந்து நாகரிகத்திற்கும் உரிய முக்கியமான நிறுவனமாக பிரகடனம் செய்யப்பட்டது. அந்த வகையிலும் இந்நூல்களைப் பாதுகாக்க வேண்டியது முக்கியமாகும். எனவே கிரந்த லிபி அறிவுடையோர் அருகி வரும் இக்காலத்தில் முதற்கட்டமாக அந்நூல்களில் அடங்கியுள்ள அம்சங்களை சுருக்கமாக எழுதி ஓர் சுருக்க நூல்விபரப்பட்டியலை (Annotated bibliography) வெளியிடுவது ஓர் பொருத்தமான செயல்வடிவமும் காலத்தின் தேவையுமாகும். மேலும் இந்நூல்களை அவற்றின் முக்கியத்தும் மற்றும் பயன் உணர்ந்த துறைசார்ந்த வல்லுனர்கள் உதவ முன்வருவார்களேயானால் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி இலத்திரனியல் புத்தகங்களாக மாற்றினால் அது மேலும் சிறப்பானதும் வரவேற்கத்தக்கதுமாகும்.